1982 மார்ச் 11]

மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும, மாநில அரசின் திட்டம் என்றால் நாமே பரிசீலனை செய்து முடிவு செய்யலாம். ஆகவே மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி கொடுக்கக்கூடிய மானியத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. பெ. க. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே, சாண எரிவாயு தயாரிக்கும் திட்டம்ஒன்றுக்குகிட்டத்தட்ட 5 ஆயிரம்ரூபாய் மதிப்பீடு ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் அதிலே மானியம் போக மீதித் தொகை பூராவுமே வங்கியினால் கொடுக்கப்படுகிறதா? இல்லையென்றால் அரசாங்கம் மானியம் கொடுப்பதைப்போல் மீதித் தொகையை அரசாங்கமே கடனாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளின்மூலமாககடனாகக் கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திலே அரசாங்கம் கொடுக்கிற மானியம் 50 சதவீதம் என்றால் 2,750 ரூபாய் கடனாகக் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆகவே பாக்கி யிருக்கிற தொகை கடனாகத்தான் கொடுக்கப்படுகிறது.

திரு. த. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாட்டுச் சாணம் தொழு உரம் தயாரிப்பதற்கும் முக்கியப் பயன் படுத்தப்படுகிற பொருள் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்வது ஆகும். என்னதான் விஞ்ஞான முறையிலே நவீன முறையிலே உரங்களை நாம் பயன்படுத்தலாம் என்று இருந்தாலும்கூட அடி உரம் என்ற முறையிலே தொழு உரம் அவசியமாகிறது. அது இல்லா விட்டால் வேளாண்மை உற்பத்தி இருக்காது என்று சொல்கிறார்கள். ஆகவே மாட்டுச் சாணம் எரிவாயுவாக தயா ரிக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்படுவதால் வேளாண்மை உற் பத்தி பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படும் என்ற நிலை இருக்காது என்று நினைக்கிறேன்.

சுற்றுலா கார்களுக்கு அகில இந்திய உரிமம் வழங்கும் திட்டம்

*வினா எண். 471—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு 1981 82-ல் அகில இந்திய அளவில் செல்லக்கூடிய ''சுற்றுலா கார்களுக்கு'' உரிமம் வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எத்தனைக் கார்களுக்கு உரிமம் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ), (ஆ) மற்றும் (இ) : மத்திய அரசு 5—1—1981 நாளிட்ட தனது அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு 50 அகில இந்திய சுற்றுலா டாக்சி உரிமங்களை வழங்க அனுமதித்தது. இந்த உரிமங்களைக் கோரி 346 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றை மாநில போக்குவரத்து அதிகாரி பரிசீலித்து 11—11—1981 அன்று தகுதி வாய்ந்த 50 நபர்களுக்கு உரிமங்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த உரிமங்கள் வழங்கக்கூடிய அந்த 50 நபர்களுக்கு எந்த எந்தத் தகுதியின் அடிப்படையிலே உரிமங்கள் வழங்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாம் வைத்திருக்கிற தகுதி இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாநில சுற்றுலாத் துறை, மத்திய சுற்றுலாத் துறை, இப்படிப் பட்டவைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் அதிலே தேவையான அளவுக்கு விண்ணப்பங்கள் இல்லாத அளவுக்கு இருந்தால் சொந்த ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கிறவர்கள் சுற்றுலாப் பேருந்துகளை ஓட்டும் என்டார்ஸ்மென்ட் போட்டு உரிமம் வைத்திருக்கின்றவர்கள் தொழில் கூட்டுறவுத் துறை அமைப்பின் கீழ் வருகின்றவர்கள் வேலையில்லாத பட்டதாரிகள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நாம் வழிவகை செய்திருக்கிறோம். இந்த வகையிலே தான் நாம் இப்போது கொடுத்திருக்கிறோம்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. இ. முத்துராமலிங்கம் : தமிழ்நாட்டிலே இதுவரை மொத்தம் எத்தனை பெர்மிட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? ஏற்கெனவே கொடுத்த பெர்மிட்களில் வண்டிகள் எடுக்காமல் சரண்டர் செய்யப்பட்ட பெர்மிட்கள் எத்தனை? சரண்டர் செய்யப்பட்டவர்களிடமிருந்து புதிதாக விண்ணப்பங்கள் கோருவதற்குத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியே 1981—82-ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் பற்றியது, எனவே அதற்கான பதிலை சொன்னேன். இதுவரை எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு தற்போது என்னிடம் இல்லை. 1981–82-ல் 50 உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு மட்டும் இருக்கிறது.

1982 மார்ச் 11]

திரு பெ. சு. திருவேங்கிடம் : துணைத் தலைவரவர்களே, இந்த 50 உரிமங்கள் வழங்கியதிலே எல்லா மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த 50 உரிமங்கள் என்பது ஒவ்வொரு ஆண்டுக்கும் ஐம்பதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, பெரும்பாலும் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்கு தந்திருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் மனுச்செய்த எல்லோருக்கும் தந்திருப்பதாகச் சொல்ல முடியாது. ஒருசில மாவட்டங்களிலிருந்து அதிகமாக மனுக்கள் வருகின்றன ; ஒரு சில மாவட்டங்களிலிருந்து குறைவாக வருகின்றன ; சில மாவட்டங்களிலிருந்து மனுக்கள் வராமல் இருக்கும் இங்கே வந்த மனுக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் ஆண்டு ஒன்றுக்கு 50 உரிமங்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. மத்திய அரசு எப்போதெல்லாம் அனுமதிக்கிறார்களோ அப்போதெல்லாம் கொடுக்கிறோம்.

உபயோகமற்ற அரசுப் பேருந்துகள்

*வினா எண் 472—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு பஸ்களில் condemn ஆவதை அரசு பள்ளிகட்கு மான்ய விலையில் அல்லது இலவசமாக தரும் யோசனை அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) : போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகளைப் பள்ளிகட்கு இலவசமாக தரும் யோசனை அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் அத்தகைய பேருந்துகளை மான்ய விலையில் பள்ளிகட்கு விற்கும் பொருட்டு எல்லா போக்குவரத்துக் கழக இயக்குநர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : துணைத் தலைவரவர்களே, இந்த அரசு கண்டமான பழைய பேருந்துகளை மானிய விலையில் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு பஸ்ஸை என்ன விலைக்குக் கொடுக்க யோசனைக் கூறப்பட்டிருக்கிறது? அரசினுடைய பள்ளிகளுக்கு அரசாங்கமே இனாமாகக் கொடுத்து உதவ முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, அரசினுடைய பள்ளியாக இருந்தாலும் அரசாங்கம்தான் அதற்குப் பணம் கொடுக்கிறது. போக்குவரத்துக் கழகம் என்பது